04.02.2026 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஓ.எஸ்.எண். 150 /2021 ) திரு.சுந்தரராஜ்.

1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடாச்சி-

1) வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உத்தேச வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படகிறது. சர்வேயர் வழங்கிய வரைபடம்,ஆகியவைகள் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.2 ஆவணம் எனது தாத்தா கிரையம் பெற்ற ஆவணம் யார் யாருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் வா.சா.ஆ.2 என்பது ருத்திரப்ப நாயக்கர் எனது தாத்தா சங்கரப்ப நாயக்கருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசல் ஆவணம் ஏன் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாத்தாவுக்கு கிரையம் கொடுத்த ருத்தரப்ப நாயக்கருக்கு கிழமேல் 14 ½ தச்சுமுளம், தென்வடல் 13 தச்சு முளம் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வேயர் மூலமாக அளந்து தாக்கல் செய்துள்ளேன். ருத்திரப்ப நாயக்கரிடமிருந்து எனதுதாத்தா எந்த ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் 1909 ல் கிரையம் பெற்றார். சர்வேயர் எப்போது அளந்து சொன்னார் என்றால் 3 வருடங்களுக்கு முன்பு அளந்து காண்பித்தார். என்ன ஆவணத்தை வைத்து அளந்து காட்டினார் என்றால் எனது பத்திரத்தையும், கிராமத்தில் உள்ள புல வரைபடத்தை வைத்து அளந்து காட்டினார். ருத்திரப்ப நாயக்கருக்குப் பாத்தியப்பட்டதாக எந்த ஆவணம் இல்லை என்றால் வா.சா.ஆ.2 ஆவணம் மட்டுமே உள்ளது. சங்கரப்ப நாயக்கருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் சுப்பம்மாள்,ஆவுடைத்தாய், ராஜலட்சுமி, சுந்ததரராஜ் ஆகிய நான்,சரஸ்வதி, இந்திராணி ஆகியோர்கள் வாரிசுகள்.

2) எனது அப்பா பெயர் என்னவென்றால் சங்கரப்ப நாயக்கர். எனது அப்பாவுடன் பிறந்த பெண்மக்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் இல்லை. எனது உடன்பிறந்த சகோதரிகளுக்கு வாரிசுகள் உள்ளதா என்றால் உள்ளது தனித்தனியாக இருந்துவருகிறார்கள். எனது சகோதரிகளின் வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. பிராதில் 3 தபசில் சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். பிராது 2 வதுதபசில்

காலிமனைக்கு தெற்கே எனக்குப் பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். 2 வது தபசில் காலிமனைக்கு வடக்கே பிரதிவாதிவீடு உள்ளதுஎன்றால் 3 ¾ அடி ஆக்கிரமித்து எனது இடத்தில் கட்டியுள்ளார்கள். 2 ம்தபசில் வீட்டிற்கு வடக்கே உள்ள வீடானது கற்கட்டிடம் என்றால் சரிதான். எனக்கு தற்போது எத்தனை வயது என்றால் 69 வயதாகிறது. எனக்கு நினைவு தெரிந்தது காலத்திலேயே அந்த கற்கட்டிடம்இருந்தது என்றால் நான் இராணுவத்தில் பணிபுரிந்தேன். எனது அப்பா அப்பாவி அவர் இருந்த காலத்திலேயே கட்டிவிட்டார்கள். எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 2008 ஆம்ஆண்டு இறந்துபோனார். 2 ம்தபசிலுக்கு வடக்கே உள்ள வீடானது கட்டப்பட்டு 100 ஆண்டுகள் பழமையான கட்டிடம் என்றால் இல்லை இடையில் கட்டப்பட்டது தான். எனது அப்பா அப்பாவி ஊடே கட்டிவிட்டார்கள் என்ற விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எப்போது இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றேன் என்றால் 1994 ஆம்ஆண்டு நவம்பர் மாதம். எனது பிராது பாரா8 ல் 26.12.2020 ல் சொத்துக்களை அளக்கும் போது தான் 3 வது இலக்கச்சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ள விவரமும், 2 வது இலக்கச்சொத்து முழுவதும் வாதிக்குப் பாத்தியப்பட்டதாக தெரியவந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் தெற்கு மாலாக பொது நடைபாதை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெரு என்று யூ.டி.ஆர். காலத்தில் தான் வகைப்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். தெருவின் தென்வடல் அளவு அகலம் 15 அடி இருக்குமா என்றால் 6 ¼ அல்லது 6 ½ அடி இருக்கும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பொது நடைபாதையின் தென்வடல் அளவு குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் தெருவை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்கே தென்வடல் 3 ½ அடியும் கிழமேலாக 20 அடியும் திண்டு, படி, கிரில் வைத்து கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 ல் ஆணையர் அறிக்கையில் சர்வே எண்.300/16 ல் தெற்கிலிருந்து வடக்காக காரைக்கட்டு கான்கிரிட் வீடு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) பிரதிவாதியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் பிரதிவாதியின் பெயர் இராமசாமி நாயக்கர் அவரின் அப்பா பெயர் தெரியாது. எனது பிராதில் 1 ம்பிரதிவாதியின் தகப்பனார் பெயர் நெடுந்தலைப்பில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது கணபதிசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கணபதிசாமிக்கு எத்தனை பேர்கள் வாரிசுகள் என்றால்

4 ஆண்கள், 2 பெண்கள் வாரிசுகள். கணபதிசாமியின் பூர்வீக ஊர் முக்கூட்டுமலை என்றால் சரிதான். கணபதிசாமி இறந்த பின்னர் அவரின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இருக்கலாம். கணபதிசாமியின் இதர வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்காததால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சிவக்குமாரும், அவரது அக்காவும் இடையூறு செய்தார்கள். வழக்கு சொத்து கணபதிசாமி நாயக்கருக்குப் பாத்தியப்பட்டியிருந்ததா அல்லது எனது தாத்தா சங்கரப்ப நாயக்கருக்குப் பாத்தியப்பட்டதா என்று தான் பிரச்சனை என்றால் சரிதான். எனது வழக்கும் காலாவதி தோஷத்தினால் பாதிக்கப்பட்டள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்கு மாலாக தெரு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் வடக்கு சுவருக்கு வடக்கே எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனது சொத்து அமைந்துள்ள சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.300/16 ஆகும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை. சர்வே எண்.300/16 சொத்தை தவிர வேறு சர்வே எண்ணில் பாத்தியம் உள்ளதா என்றால் சர்வே எண்.300/16 ல் தான் நான் வீடு கட்டியுள்ளேன். எனது வழக்கு பொய்யான வியாஜ்ஜிய மூலம் கூறி தாக்கல் செய்ய இந்த வழக்குதள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
04.02.2026.